DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-403/2019

Prosecution witness - PW 1

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.செல்வம் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A2, A3 present.)
10.03.2026 - 11.30 PM

முதல் விசாரணை:-

1. நான் இலந்தைகுளம் கிராமத்தில் குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். பட்டியல் சாட்சிகள் 2 முதல் 4 ஐ எனக்கு தெரியும்.

2. சுமார் 8 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் இரவு நேரத்தில் சாயல்குடி சோதனைச்சாவடி அருகே சுமார் 20க்கும் மேற்பட்ட நபர்கள் சண்டை நடந்து கொண்டிருந்தார்கள். அதைப் பார்க்க சென்றபோது என்னை யாரோ கீழே தள்ளிவிட்டார்கள். என்னை தள்ளிவிட்டதில் எனது தலையிலும், கையிலும் காயம் ஏற்பட்டது. என்னை தள்ளிவிட்டவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. நான் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த போது அங்கு வந்த சாயல்குடி போலீசாரிடம் புகார் வாக்கு மூலம் கொடுத்தேன். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.1 ஆகும். புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியிருந்து என்று எனக்கு தெரியாது. போலீசார் விசாரிக்கவில்லை.

பிறழ் சாட்சி:-

சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதன் அடிப்படையில் அனுமதி அளிக்கப்பட்டது.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>

கடந்த 21.03.2018 ம் தேதி இரவு 08.00 மணியளவில் சாயல்குடி சோதனைச்சாவடி டீக்கடையின் அருகே அழகு டீக்கடை முனபு கொண்டிருந்த போது எதிரிகள் சூரியன், மட்டி என்ற ராயப்பன், மற்றும் அழகு ஆகியோர் நீ எந்த ஊருடா இங்க எதுக்கு வந்தாய் என்ற அசிங்கமாக பேசி கத்தியாலும், மண்வெட்டியாலும் என்னை அடித்து காயப்படுத்தியதில் இடது கை பெருவிரலுக்கு அருகே மற்றும் தலையில் காயம் ஏற்பட்டது என்றும், எதிரி அழகு கொதித்த பாலினை என் மேல் ஊற்றியதில் வலது கையில் காயம் ஏற்பட்டது என்றும், எதிரிகள் என்னை பார்த்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும், எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு துாத்துககுடி அரசு தலைமை மருத்தவமனையில் சிகிச்சை பெற்றேன் என்றும், அங்கு வந்த சாயல்குடி போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றும், புகார் வாக்குமூலத்திலும், போலீசார் விசாரணையிலும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் தெரிந்தவர்கள் என்பதால் எதிரிகளுடன் சமதாதானம் செய்து கொண்டு எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.04 16:51:25 +0530